**10.03.2026**

**O.S.No.134/2022**

**வா.சா.1 : ஜெயராமன்**

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>:-**

9) தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணத்தில் யார் யாருக்கு எவ்வளவு பாகம் என்ற விவரத்தை எனது வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி தாவா விளம்புகை பரிகாரம் கேட்டுள்ள நிலையில் எனது அப்பா எழுதி வைத்த 22.10.2018 தேதிய தான செட்டில்மெண்ட் அசல் பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாததால் நான் கோரி உள்ள விளம்புகை பரிகாரம் நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. வாதி தரப்பு சான்றாவணங்களில் வட்டாட்சியரிடம் இருந்து தாக்கல் செய்துள்ள சான்று தானசெட்டில்மெண்ட் ஆவணத்தை தயார் செய்வதற்காக ஏற்படுத்தப்பட்டவை என்றால் சரியல்ல. நான் விவசாயம் வேலை பார்த்து கொண்டு மைசூரில் இருந்தேன் என்றால் சரிதான். நான் 2022 வருடம் தை மாதம் போய் சித்திரை மாதம் வந்தேன். மேற்படி காலத்தில் மைசூரில் யாரிடம் வேலை செய்தேன் என்ற விவரத்தை நான் எனது வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

**11)** ஊர்பெரியோர்களிடையில் பாக சொத்தை ஒப்படைக்க கோரி நான் கேட்டதாக சொல்லும் விவரத்தை நான் வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை. ஊர்பெரியோர்கள் யார் யார் என்ற விவரத்தை நான் எனது வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். 2018ம் ஆண்டு வா.சா.ஆ.1 செட்டில்மெணட் ஆவணத்தை பொய்யாக ஏற்படுத்தி கொண்டு பிரதிவாதிகள் மீது தாவா சொத்தை ஒப்படைக்ககோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனவே தாவா சொத்தில் பிரதிவாதிகள் கூட்டு உரிமைதாரர்கள் என்பதால் நான் வழக்கில் கோரி உள்ள பரிகாரம் அவர்களுக்கு எதிராக கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

எனவே இந்த தாவா செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S

Digitally signed by GANESAN S
Date: 2026.03.10 16:40:35 +0530

**Subordinate Judge, Attur.**